செய்தி வெளியீடு எண். 37 நாள்.11.1.2010

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழா (15.1.2010) அன்று மாலை 5.30 மணிக்கு வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற உள்ளது.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில், விருதுகளை வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

விருது பெறுவோர்

| | | |
|---|---|---|
| அய்யன் திருவள்ளுவர் விருது | – | முனைவர் ஐராவதம் மகாதேவன் |
| தந்தை பெரியார் விருது | – | திரு.நக்கீரன் கோபால் |
| அண்ணல் அம்பேத்கர் விருது | – | திருமதி.கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் |
| பேரறிஞர் அண்ணா விருது | – | முனைவர் அவ்வை நடராசன் |
| பெருந்தலைவர் காமராசர் விருது | – | விருதுநகர் திரு.ஆர்.சொக்கர் |
| மகாகவி பாரதியார் விருது | – | திரு.டி.என்.இராமச்சந்திரன் |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது | – | கவிஞர் தமிழ்தாசன் |
| தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது | – | திரு.அண்ணாமலை என்கிற இமயம் |
| முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | – | திருமதி.தாயம்மாள் அறவாணன் |

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், விருதுபெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகை ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழி வழங்கி, தங்கப்பதக்கம் அணிவித்துச் சிறப்பு செய்தும், சிறந்த நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத்தார்க்கும் பரிசுகள் வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி ஆணைகள் வழங்கியும், அகரமுதலியின் 28 ஆம் தொகுதியை வெளியிட்டும் சிறப்புரையாற்றுவார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழா தலைமை ஏற்க உள்ளார்கள்.

முன்னதாக 15.1.2010, காலை 9.00 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் அன்புடன் அழைக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.